இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2021 யூலை

## (103) பொருளியல்

---

அதிகளவான பரீட்சார்த்திகளால் பொருளியல் வினாத்தாளுக்கு அளிக்கப்பட்ட விடைகளை அவதானித்தபோது அவை எண்ணிக்கை ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது சில வினாக்களுக்கு குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் விடையளிக்காததைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே விடைத்தாள் மதிப்பீட்டின்போது பரீட்சகர்களால் கோடிட்டுக் காட்டப்பட்ட பிரதான அவதானிப்புகள் சில கீழே தரப்பட்டுள்ளது.

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

இந்த வினா ஒரு கட்டாய வினாவாக இருந்ததுடன் முதல் 10 பகுதிகளான **1.1** தொடக்கம் **1.10** வரையானவை பல்தேர்வு வினாக்களாக அமைந்திருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவற்றுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர்.

**பகுதி 1.11** மற்றும் **1.12** ஆகியன தரப்பட்ட இரண்டு சொற்களில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்டிருந்தது. இந்த இரண்டிற்கும்கூட பெரும்பாலானவர்களால் வெற்றிகரமாக விடையளிக்கப்பட்டிருந்தன.

**பகுதி 1.13** மற்றும் **1.14** என்பன தரப்பட்ட கூற்றுகள் ''சரியானதா'' அல்லது ''தவறானதா'' என்பதைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது.

எவ்வாறாயினும், பகுதி **1.15** தொடக்கம் **1.20** வரையான ஐந்து வினாக்களுக்கும் குறுகிய விடைகளை (பெயரிடல் மற்றும் நிரற்படுத்தல்) வழங்குமாறு கேட்கப்பட்டிருந்தது. இந்தப் பகுதிக்கு அளிக்கப்பட்ட விடைகள் ஒப்பீட்டளவில் நியம மட்டத்திற்குக்கூட வந்திருக்கவில்லை. இந்தப் பகுதி பாடத்திட்டத்தை உள்ளடக்கியவாறான பல கோட்பாட்டு ரீதியான அம்சங்களைப் பரீட்சித்திருந்தது.

**வினா 1.15**

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இந்த வினாவுக்கு அளிக்கப்பட்ட விடைகள் தவறானவையாகக் காணப்பட்டன. நுகர்வோர் வருமானப் பகிர்வு, பொருளின் தன்மை என்பன கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பொருளின் அக்கறை மற்றும் விலையின் கீழ் பொருளின் விலையைக் குறிப்பிடாது விடைகள் வழங்கப்பட்டிருந்தன.

**வினா 1.16**

பரீட்சார்த்திகள் பிரதியீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சரியாக இனங்காணவில்லை. சிலர் வருமானத்தில் ஏற்படும் மாற்றமானது வருமான விளைவை ஏற்படுத்தும் எனத் தவறாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா 1.17**

சில பரீட்சார்த்திகள் கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளாக நிரம்பலின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் பொருளின் வரைவிலக்கணம், கிடைக்கக்கூடிய பிரதியீட்டுப் பொருள்களின் எண்ணிக்கை போன்ற தவறான விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா 1.18**

சில பரீட்சார்த்திகள் அளவுத்திட்ட விளைவின் கட்டங்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக குறைந்துசெல்லும் எல்லை அளவுத்திட்டக் கோட்பாட்டைக் குறிப்பிட்டிருந்தனர். அதற்கிணங்க, அவர்கள் குறைந்துசெல்லும் விளைவு, அதிகரிக்கின்ற விளைவு, மாறாத விளைவு போன்ற தவறான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா 1.19**

‘‘கணக்கீட்டு இலாபத்தை’’, ‘‘பொருளாதார இலாபத்திலிருந்து’’ வேறுபடுத்தும்போது, பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் அந்த இரண்டு எண்ணக்கருக்களும் பற்றிய தெளிவான புரிதல் காணப்படவில்லை என்பதை அறியக்கூடியதாக இருந்தது. பலர் ஊடுசெயல்களை ஏடுகளில் பதிவு செய்து இலாபத்தைக் கணிப்பிடுவதன் மூலம் ஒரு காலப்பகுதியில் ஈட்டப்படும் இலாபம் என கணக்கீட்டு இலாபத்தை விபரித்திருந்தனர். இவ்வாறே, ‘‘பொருளாதார இலாபம்’’ என்பது ஒரு பொருளாதாரத்தைப் படிப்பதன் ஊடாகப் பெறப்பட்ட தகவல்களின் மூலம் இனங்காணப்பட்ட ஒரு இலாபம் என விபரித்திருந்தனர். இது மாணவர்களுக்குப் புரியவில்லை, அதனால் விடையும் தவறாக அமைந்திருந்தது.

**வினா 1.20**

இந்த வினாவுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடையாக குறுங்கால ஓட்ட உற்பத்திச் செயன்முறையைச் சுருக்கமாக விபரிப்பது எதிர்பார்க்கப்பட்ட போதிலும், பல பரீட்சார்த்திகள் தவறாக விடை அளித்திருந்தனர். பலர் மாறும் மற்றும் நிலையான காரணிகள் குறுங்கால ஓட்ட உற்பத்திச் செயன்முறையில் உள்ளடக்கப்படுகிறது என்பதை குறிப்பிடத் தவறியிருந்தனர்.

## <u>பகுதி B</u>

**வினா இல. 02**

**(a)** இங்கு கலப்புப் பொருளாதாரத்தின் 3 பிரதான பண்புகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. இந்த வினாவுக்கான விடைகள் பாடப்புத்தகத்தில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. கலப்புப் பொருளாதாரத்தின் பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்ட போதிலும், சிலர் வினாவுக்குப் பொருத்தமற்ற விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதியில், அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் சந்தைப் பொருளாதார முறைமை ஒன்றினால் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன எனக் கேட்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தெளிவாக வேறுபடுத்திக் குறிப்பிடத் தவறியிருந்தனர். சிலர் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை சரியாகக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும், அவர்களால் அவை எவ்வாறு சந்தைப் பொருளாதார முறைமையினால் தீர்க்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிட முடியவில்லை. இதனால், அவர்களால் அரைவாசிப் புள்ளிகளையே பெற முடிந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

**(c)** பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமிடையிலான வேறுபாட்டை ஒவ்வொன்றுக்குமான உதாரணங்களுடன் இனங்காணுமாறு கேட்கப்பட்ட இவ்வினாவைச் சரியாக இனங்கண்டிருந்ததுடன் வெற்றிகரமாக விடையளித்துமிருந்தனர். பரீட்சார்த்திகள் தேவைகளின் இயல்புகளாக ''வரையறுக்கப்பட்ட தன்மை'', ''சகலருக்கும் பொதுவானது'' போன்றவற்றை இனங்கண்டிருந்தனர். மேலும், தேவைகள் வரையறையற்றதும் அவை ஒருவருக்கொருவர் மாறுபட்டது எனவும் தேவைகள் விருப்பங்களின் ஊடாக திருப்தி செய்யப்படுகின்றன எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

## வினா இல. 03

**(a)** சமன்பாட்டைத் தீர்ப்பதற்கு, பரீட்சார்த்திகளுக்கு எளிய அட்சரகணித அறிவு தேவையாகும். குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் சமன்பாட்டைத் தீர்த்திருந்ததுடன் சரியான விடையைப் பெற்று, ஒதுக்கப்பட்ட முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், கணித அறிவு குறைந்த சில பரீட்சார்த்திகளால் சரியான விடையை அளிக்க முடியவில்லை என்பதுடன் இதனால் அவர்களால் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் அரசாங்கமானது, ஒரு பண்டத்தின் சமநிலை விலையை விடக் குறைந்த விலையை அப்பண்டத்தின் உயர்ந்தபட்ச விலையாக விதிக்கும்போது ஏற்படக்கூடிய விளைவுகளை வரைபொன்றின் உதவியுடன் விபரிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது. பல பரீட்சார்த்திகள் உயர்ந்தபட்ச விலையொன்றை விதிப்பதன் விளைவுகளைச் சரியாக இனங்கண்டிருந்தனர். ஆயினும்கூட, ''மிகையான தேவையை உருவாக்குதல்'', ''கருப்புச் சந்தை விலையை'' அனுபவித்தல், ''வழங்கலின் பற்றாக்குறை'' போன்ற பிரதான மூன்று காரணங்களில் ஒன்று அல்லது இரண்டை எழுதிய பலர் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் ஒரு பகுதிப் புள்ளியை மாத்திரமே பெற்றிருந்தனர்.

## வினா இல. 04

**(a)** இந்த வினாவில், மாணவர்களிடம் ''நிறை போட்டிச் சந்தையின்'' நான்கு (04) பண்புகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. இதிலிருந்து பொதுவான சந்தைக் கட்டமைப்புகள் பற்றிய அறிவையும் புரிதலையும் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ''நிறை போட்டிச் சந்தை'' பற்றிக் கவனம் செலுத்தாது தெளிவற்ற / பிழையான விடைகளை அளித்திருந்தனர். துல்லியமான விடைகளை அளித்திருந்த சில பரீட்சார்த்திகளும் இருந்தனர். இந்தப் பாடத்தைப் படிக்காத பரீட்சார்த்திகள் விடையளிக்கச் சிரமப்பட்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சிலர் வேறு ''பொருளாதாரக் கட்டமைப்புகளின்'' பண்புகளைக் குழப்பி எழுதியிருந்த அதே நேரம் வேறு சிலர் ''நிறை போட்டிச் சந்தைகளை'' போட்டிக் கைத்தொழில்களுடன் குழப்பி எழுதியிருந்தனர்.

**(b)** இங்கு, இலங்கை போன்ற ஒரு நாட்டிற்கு பணவீக்கத்தால் ஏற்படக்கூடிய விளைவுகளை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சூழ்நிலையின் பொதுவான நிலைமைகளைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய விடைகளை அளித்திருந்தனர். பரீட்சார்த்திகளால் தமது பொது அறிவைப் பயன்படுத்தி இந்தப் பகுதியிலிருந்து புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

## வினா இல. 05

**(a)** இங்கு, விதிப்பனவுகள் தவிர்ந்த சர்வதேச வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் வேறு வழிமுறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறையாக ''ஏற்றுமதி அபிவிருத்தி'', ''தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல்'', ''சுங்கத் தீர்வைகளை அதிகரித்தல்'' போன்ற தெளிவற்ற விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** **(i)** இந்தப் பகுதியில், பரீட்சார்த்திகளிடம் இரு நாடுகளினதும் முழு நயத்தை இனங் காணுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆயினும்கூட, வேறு சிலர் பொருத்தமானவாறு அரிசி மற்றும் கோதுமை உற்பத்தியை தொடர்புபடுத்தாது நாடு **X** மற்றும் நாடு **Y** என வெறுமனே குறிப்பிட்டிருந்ததால் முழுப் புள்ளிகளையும் பெறவில்லை.

**(ii)** இந்தப் பகுதியில், ஒப்பீட்டு மற்றும் முழு நயங்களின் கணிப்பீடு பற்றிய கணித அறிவின் பிரயோகம் பரீட்சிக்கப்பட்டது. கணித்தல் பகுதி சரியாகச் செய்யப்பட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் கோதுமையை உற்பத்தி செய்வதில் நாடு **X** உம் அரிசியை உற்பத்தி செய்வதில் நாடு **Y** உம் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டுள்ளன எனபதை இனங் கண்டிருக்கவில்லை. இதனால், இந்தப் பகுதிக்காக ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் அவர்களால் பெற இயலவில்லை.

**(c)** அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர். சிலர் வெறுமனே ''கொடுப்பனவுகளும் பெறுவனவுகளும்'' என எழுதியிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகளால் திருப்திகரமான விடையை அளிக்கக்கூடியதாக இருந்தது. மொத்தத்தில், இந்த உப வினாவுக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

## <u>பகுதி C</u>

## வினா இல. 06

**(A)** **(a)** சில பரீட்சார்த்திகளிடம் அரசாங்கப் பாதீட்டிலுள்ள ''மீண்டுவரும் செலவுகள்'' மற்றும் ''மூலதனச் செலவுகள்'' பற்றிய போதுமான அறிவு காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. சிலர் நிலையான சொத்துகளின் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்ட செலவினம் எனக் குறிப்பிட்டிருந்த போதிலும், அது தொடர்பான ஏனைய செலவினங்களின் விபரங்களை வழங்கத் தவறியிருந்தனர். போதிய அறிவின்மை மற்றும் விளக்கமின்மை என்பன அதற்கான காரணங்களாக இருக்கலாம்.

**(b)** இந்தப் பகுதியில், நேரில் வரிகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் மறைமுகமாக விதிக்கப்படுகின்ற ஒரு வரியாகவும் சதவீதமொன்றாகவும் நேரில் வரிகளை இனங்கண்டிருந்தனர். இது அவர்களிடம் நேரில் வரிகள் பற்றிய ஆழமான அறிவின்மையையே காட்டுகிறது.

**(B)** **(a)** தேசிய வருமானக் கணிப்பீட்டில் ''வருமான அணுகுமுறை'' பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அனுமானத் தரவுத் தொகுதி தரப்பட்டிருந்தது. தரவுகளைத் துல்லியமாக சமர்ப்பித்து கணிப்பீட்டைச் சரியாக மேற்கொண்டிருந்த பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் உற்பத்தி மானியங்களைச் சரியாகப் பிரயோகிக்கத் தவறியதன் காரணமாக ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற அவர்களால் முடியாது போயிருந்தது.

**(b)** தேசிய கணக்குகளைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தை இனங்கண்டிருந்த பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்த அதேவேளை சராசரி அறிவுடன் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அளவிலான பரீட்சார்த்திகள் வினாவுக்குச் சம்பந்தமற்ற விடைகளை வெறுமனே எழுதியிருந்தனர்.

**(C)** ‘‘அரசாங்கத்தின் நிதிக் கொள்கை’’ பற்றிய இந்தப் பகுதிக்கு விடையளிக்கும்போது, பல பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை வழங்கி, ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், விடையளிக்கும்போது, பலர் நிதிக் கொள்கையின் பாகங்களாக வரி வருமானம் மற்றும் அரசாங்கச் செலவினம் ஆகியவற்றை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும்கூட, அதிகளவான பரீட்சார்த்திகள் நிதிக் கொள்கையின் ஒரு பகுதியான அரசாங்கக் கடன்களை மறந்திருந்தனர். இதன் காரணமாக, பரீட்சார்த்திகளால் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிப்பதில் கவனம் செலுத்தவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாக இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து, அவற்றை பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(9)** சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -